ஒப்புகை பெறத்தக்க பதிவு

கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
தேசிய நெடுஞ்சாலை வட்டம், சேலம்–4.

டி.ஆர்.பி.எண்.178/ இவஅ–1/தே.நெ/2025/ /நாள்.29. 01.2026

பெறுநர்
தி/வா.சங்கரானந்த் இன்ஃப்ரா.
B–303, ஆல்பைன் டவர்ஸ்,
எண்.3 பழனியப்பா வடக்கு தெரு.
செங்குந்தபுரம்,
கரூர் – 639 002.

அன்புடையீர்,

பொருள்: சேலம் (தே.நெ) வட்டம் – கோயமுத்தூர் (தே.நெ) கோட்டம் – திண்டுக்கல்–பெங்களூர் சாலையிலிருந்து கி.மீ 109/6–ல் பிரிந்து சீலக்காம்பட்டி செல்லும் சாலை கி.மீ.0/0 முதல் கி.மீ.4/700 வரை இடைவழி தடத்தை இருவழித்தடமாக அகலப்படுத்துதல் மற்றும் கி.மீ.0/0 முதல் கி.மீ.4/980 வரை உறுதிப்படுத்துதல் கி.மீ.1/10 (I), 1/10 (II), 3/2 (I), 3/2 (II), 3/6, 3/8, 3/10, 4/2, 4/6–ல் சிறுபாலம் கட்டுதல் மற்றும் கி.மீ.0/4–ல் தரைமட்ட பாலத்திற்கு பதிலாக சிறிய பாலம் கட்டுதல் உட்பட – பணிக்கு – வேலை உத்திரவு

பார்வை :
1. தங்களது ஒப்பந்தப்புள்ளி நாள்.05.01.2026
2. தங்களது விலை குறைப்பு கடிதம் நாள்.09.01.2026
3. தலைவர் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை, அவர்களின் செ.மு.க.எண்.10/360–24/ஆணையம்//தொ.நு.கு/2026, நாள்.28.01.2026
4. தலைமைப் பொறியாளர் (தே.நெ) சென்னை அவர்களின் கு.எண். (கோ.மு.10வ) CRIF–2025–26–CBE–23 /ஒப்–2/ தே.நெ /2026/ நாள்.28.01.2026.

********

தமிழக ஆளுநர் அவர்களுக்காகவும், அவர்களது சார்பிலும், மேற்கண்ட பணிக்கு பார்வை (1)–ன்படி தங்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் 0.03% மதிப்பீட்டு விலைக்கு குறைவாக (2025–26) ஜி.எஸ்.டி உட்பட மொத்த ஒப்பந்தத் தொகைக்கு ரூ.11,47,13,701/– (ரூபாய் பதினொரு கோடியே நாற்பத்தேழு லட்சத்து பதிமூன்றாயிரத்து எழுநூற்று ஒன்று மட்டும்) (அடிப்படை தொகை ரூ. 9,72,15,001/– ஜி.எஸ்.டி @ 18% ரூ. 1,74,98,700/–)க்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

தாங்கள் ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்புத் தொகையாக ரூ.5,84,000/–க்கு வைப்பு இரசீது வடிவில் செலுத்தியுள்ளீர்கள்.

தாங்கள் மேற்கண்ட பணிக்கு பிணை வைப்புத் தொகையாக ரூ.22,95,000/–க்கு செலுத்த வேண்டும்.

எனவே, மேற்கண்ட பிணை வைப்புத் தொகையாக ரூ.22,95,000/- (ரூபாய் இருபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரம் மட்டும்) தேசிய சேமிப்புப் பத்திரங்களாகவோ, கிசான் விகாஸ் பத்திரங்களாகவோ, அல்லது வைப்பு இரசீது வடிவிலோ 31.01.2031 வரை செல்லத்தக்க வகையில் கோட்டப் பொறியாளர் (தே.நெ) கோயமுத்தூர் அவர்களின் பதவியின் பெயரில் அடமானம் செய்யப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ள கொண்டு வரவேண்டும். மேலும் நடப்பாண்டிற்குரிய சரக்க மற்றும் சேவை வரிச் சான்றிதழ் கொண்டு வர வேண்டும்.

இப்பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிட வரும்போதுபொழுது நெடுஞ்சாலைத்துறையில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரரை அறிமுகமான நபரை சாட்சியாக அழைத்து வரவேண்டும். மேலும் இப்பணிக்கு கீழ்கண்டவாறு தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

ஒரு வருட அனுபவமுள்ள பி.இ (சிவில்) பொறியியல் பட்டதாரி ஒன்று மற்றும் சிவில் டிப்ளமோ படித்த ஐந்து வருட அனுபவமுள்ள இரண்டு தொழில்நுட்ப உதவியாளரின் சம்மதக் கடிதம் மற்றும் அவர்களது கல்வித் தகுதி சான்றிதழ் நகல் சான்றொப்பம் பெற்று இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

எழுத்து மூலம் செய்துகொள்கிற இந்த ஒப்பந்தம் தான் தங்களுக்கும் இந்த துறைக்கும் அடிப்படை உரிமையாக கருதப்படும். தாங்கள் ஒப்பந்தப்பத்திரத்தில் முதலில் கையொப்பமிட்டு பிறகு அரசாங்கம் சார்பில் கண்காணிப்புப் பொறியாளர் (தே.நெ) சேலம், அவர்களால் கையொப்பமிட்ட பிறகுதான் செல்லத்தக்கதாகும்.

தாங்கள் இவ்வலுவலகத்திற்கு ஒப்பந்தப் பத்திரத்தில் கையொப்பமிட 15 தினங்களுக்குள் வரத்தவறினால் தங்களுடைய வைப்புத் தொகை P.S. to S.S.R.B. விதி எண்.104.05ன் படி பறிமுதல் செய்யப்படும்.

இது அபராதமாக கருதப்படமால் இந்த துறை அடைந்த இழப்பை ஈடுசெய்யும் விதத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

29/1

கண்காணிப்புப் பொறியாளர்,
(தே.நெ) சேலம்.

29/1/26

நகல்: கோட்டப் பொறியாளர் (தே.நெ) கோயமுத்தூர்
நகல்: உதவி கோட்டப் பொறியாளர் (தே.நெ) பொள்ளாச்சி

Signature Not Verified
Digitally signed by M SHANMUGAM
Date: 2026.04.21 15:29:08 IST
Location: eProcure-EPROC